# திராவிடப் போராளிகள் 17

■ வழக்கறிஞர் அருள்மொழி

**மறைக்கப்பட்ட பங்களிப்பு, மறக்கப்பட்ட தியாகம், மறுக்கப்பட்ட அங்கீகாரம் என இந்திய வரலாறு நெடுகிலும் குறைந்தபட்சம் அடிக்குறிப்பாகக் கூட இல்லாமல் போன திராவிட இயக்க வீராங்கனைகள் எத்தனையோ பேர். அவர்களைப் பற்றி, திராவிட இயக்கம் மட்டுமே பதிவு செய்துள்ளது. இது அத்தகைய தியாகச் சுடர்களை அடையாளம் காட்டும் தொடர்...**

## சொத்துரிமையே சுதந்திரம் என்ற மாதரசி!

*இந்தியாவில் விடுதலைப் போராட்டம் நடந்துகொண்டிருந்த 1930-களில் காங்கிரஸும் சனாதனிகளும் 'ஸ்திரீ தர்மம்' பற்றி 'போதனா' வகுப்புகள் நடத்திக்கொண்டும், 'நளாயினி' 'சாவித்திரி' கதைகளை இளம்பெண்களுக்குப் பாடம் சொல்லிக் கொண்டிருந்த காலத்தில் 'மரகதவல்லி' அவர்கள் பெண்களுக்கு விடுத்த அறைகூவலைப் பாருங்கள்.*

*"சகோதரிகளே! எழுமின்! விழிமின்! உலகத்தை நோக்குங்கள். மேல்நாட்டுச் சகோதரிகளைப் பாருங்கள். அவர்களது சுதந்திர வாழ்வைக் காணுங்கள். இன்னும் அடிமைவாழ்வு வாழ விரும்புகிறீர்களா? அடுப்பூதும் பெண்களாக வாழ எண்ணுகிறீர்களா? ஆண்களைப்போல் சமத்துவமாக எல்லா உரிமைகளையும் பெற உங்களுக்கு ஆசை எழவில்லையா? வைதீகர்களின் பொய்க்கோட்டையைத் தகர்த்தெறிந்துவிட்டு வெளியே வாருங்கள். மூடப் பழக்கவழக்கங்களை ஒழியுங்கள்.*


*நீங்கள் உலகில் நல்வாழ்வு வாழ வேண்டுமானால், நல்ல காதலனோடு இன்பவாழ்க்கை நடத்த வேண்டுமானால், நீங்களும் மனிதஜென்மம் என்று ஆண் மக்கள் கருத வேண்டுமானால் சொத்துரிமைக்குப் போராடுங்கள்".*

*மரகதவல்லி அம்மையார் போராடியது மறுமணம் என்னும் திருமண உரிமைக்காகத்தான். ஆனால், ஒரு பெண்ணின் வாழ்க்கை எப்போது மகிழ்ச்சியாக இருக்கும் என்றால், 'அவளின் கணவன் என்பவன் நல்ல காதலனாக இருக்க வேண்டும்' என்கிறார். 'மகிழ்ச்சியான வாழ்க்கை, பெண்ணின் அடிப்படை உரிமை' என்கிறார். சொத்துரிமைதான் அனைத்து உரிமைகளுக்கும் அடிப்படை என்கிறார். என்ன ஒரு தெளிவு!*

### எட்டுத்திக்கும் 'மாதர் மறுமணம்'

*1936-ஆம் ஆண்டு மரகதவல்லி அவர்கள், தன் கணவர் முருகப்பா தொடங்கிய* **'மாதர் மறுமணம்'** *என்ற இதழின் ஆசிரியர் ஆனார். எண்ணங்களில் புதுமை, எழுத்துகளில் புரட்சி என்று 'மாதர் மறுமணம்' புகழ்பெற்றது.*

*இலங்கை, மியான்மர், சிங்கப்பூர், மலாய், பினாங்கு ஆகிய நாடுகளில் அந்த இதழுக்கு முகவர்கள் இருந்தார்கள்.*


Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.
Editor: M. Maragathavalli.

**1936-ஆம் ஆண்டு மரகதவல்லி அவர்கள், தன் கணவர் முருகப்பா தொடங்கிய 'மாதர் மறுமணம்' என்ற இதழின் ஆசிரியர் ஆனார்.**

**வா**ழ்க்கை எனும் பேராறு ஒரே போக்கில் ஓடுவதில்லை. சீர்திருத்தச் செம்மல் முருகப்பாவின் கவனம் இலக்கியத்தில் விழுந்தது. திருக்குறள், சிலப்பதிகாரம் எனத் தொடங்கி கம்ப இராமாயணத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு இராமாயண பாலகாண்டத்தைப் பதிப்பித்தார் முருகப்பா. அவர்கள் நடத்திய பள்ளியும் இராமகிருஷ்ண வித்யாலயமானது. முருகப்பா அவர்கள் காலமான பின்பு மரகதவல்லி அம்மையார் அந்தப் பள்ளியைத் தொடர்ந்து நடத்தினார். ஆனால், சுயமரியாதை இயக்க வீராங்கனையாக வியக்கவைத்த அவரது எழுச்சிமிக்க எழுத்தும் பேச்சும் என்ன வாயிற்றென்று தெரியவில்லை.


*அட்டையில் காந்தியாரின் படத்துடன், உள்ளே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதையுடன் வெளியானது, முதல் இதழ். பத்திரிகையின் பல பக்கங்களில் விதவைக் கொடுமைக்கு எதிரான முழக்கங்களை அச்சிட்டார்.*

**'மாதர் சுதந்திரமே தேச சுதந்திரம், அதுவே மக்கள் சுதந்திரம்', 'விதவை கண்ணீர் வீட்டை அழிக்கும்', 'துணையிழந்தாரை மணப்பது புண்ணியம்'** *போன்ற முழக்கங்கள், படிப்பவர் உள்ளத்தில் படிந்திருக்கும் பழமைப்பாசியைப் பக்குவமாக அகற்றின.*

### அமிர்தவல்லியின் சபதம்

*விழிப்பு உணர்வை ஏற்படுத்தும் சிறுநூல்களையும் வெளியிட்டார். எடுத்துக்காட்டாக* **'அமிர்தவல்லி மாலை: விதவா விவாக வீரப் பெண்ணின் சரித்திரம்'** *என்ற கவிதை நூல், மறுமணம் செய்தே தீருவேன் என்று வீர சபதமேற்ற ஒரு பெண்ணைப் பற்றிய கதையாகும். பாரதியாரின்* **'பாஞ்சாலி சபதம்'** *கவிதையில் வரும் திரௌபதியின் சபதக்காட்சியைப்போல மறுமணம் முடிக்காமல் சோறுண்ண மாட்டேன் எனச் சூளுரைக்கிறாள் அமிர்தவல்லி.*

***'மூட வழக்கம் தொலைந்து மறுமணமும் தான் செய்து / சந்தோஷங் கொண்டாடி தாலியெடுத்துக்கட்டிப் / பட்டாடையுடுத்திப் பாரில் நகைபோட்டு / முன்மாதிரி செய்து முடிக்குநாள் ஆகுமட்டும் / தண்ணீர் தவிர சாப்பிடேன் ஒன்றுமென்றாள் / செத்தாலும் சாவதல்லார் தீண்டேன் ஒரு பருக்கை / சபதம் முடியுமட்டும் சாப்பிடேன் சாதமினி' என்று பெருஞ்சபதம் இட்டாளே மாதரசி!***




*அதுமட்டுமன்று.* **'விதவைச் சோதரிகளுக்கு'** *என்ற தலைப்பில்* **'செட்டிமார் நாட்டு விகடன்'** *என்ற கற்பனைப் பாத்திரம் பாடியதாக ஒரு பாடல். குடுகுடுப்பைக்காரர் அழைப்பது போல பெண்களுக்கு அழைப்பு விடுக்கிறது.'வாங்க வாங்க நற்பெண்டுகளா! இந்த வாயாடிச் சோதரன் சொல் கேட்டீங்களா!*

**ஓங்க செத்த பதியாலே**
**சேமமற்றதாலே**
**கத்தி கத்தி மேலே**
**கதறுவதேன் நாளே**
**வெள்ளாடையே விடுத்து,**
**நல்லாடையே உடுத்து**
**சொல்லு சொல்லு சொல்லு**
**மறுமணமே கொள்ளு**
**திருவுருவாய் நில்லு**
**பெருவுரிமை வெல்லு**
**சிரித்துக்காட்டுப் பல்லு- உமைச்**
**சீறுவாரைத் தள்ளு! தள்ளு!தள்ளு!**

*ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் இப்படிப்பட்ட கற்பனைகளைக் கவிதையாக்கும் துணிவும் தெளிவும் திராவிட இயக்கம் அமைத்துக் கொடுத்த பெண்ணியச் சிந்தனையின் அடித்தளத்தில் எழுந்தது என்பதுதான், நமது இயக்கத்தின் பெருமை.*

### சொத்துரிமை தரும் சுதந்திரம்

*"இவ்வுலகில் கண்ணியமாகப் பிறர் இகழாமல் வாழ்க்கை நடத்த வேண்டுமானால், பொருள் வேண்டுவது அவசியமாகும். எனவே சொத்துரிமை அடைவதற்குரிய மார்க்கங்களைத் தேடுங்கள். சொத்துரிமை பெறுதற்குரிய தீர்மானங்களை நிறைவேற்றுங்கள். சட்டசபையிலிருக்கும் ஜனப்பிரதிநிதிகளிடம் உங்கள் நோக்கங்களைக் கூறி, வெற்றி பெற முயலுங்கள்.* **வெள்ளைக்கார ஆட்சியே இருப்பினும், குடியேற்ற நாட்டந்தஸ்து வந்தாலும், பூரண சுயராஜ்ஜியம் பெற்றாலும் சொத்துரிமையில்லாத உங்களுக்கு எல்லாம் ஒன்றுதான். எனவே, சொத்துரிமை பெறுவதற்குரிய மார்க்கங்களைத் தேடுவீர்களென நம்புகிறேன்!"**

*தேச விடுதலைக்காகப் பெண்கள் தியாகம் செய்ய வேண்டும் என்ற பிரசாரம் நடந்த காலப் பின்னணியில்,* **'நாடு அடிமை நாடாக இருந்தாலும், விடுதலையே அடைந்தாலும், சொத்துரிமையில்லாத பெண்ணுக்கு எல்லாமே ஒன்றுதானே'** *என்று மரகதவல்லி அம்மையார் எழுப்பிய கேள்வி அவரின் சமூக அறிவியல் பார்வைக்குச் சான்றாகிறது.*

*திராவிட இயக்கத்தின் சுடராக மிளிர்ந்தபோது அவர் எழுதிய இந்த வரிகள்தான் மரகதவல்லி என்ற திராவிடப் போராளியின் அடையாளமாக இன்றும் அவர் புகழைப் பேசுகின்றன.*

(வருவார்கள்...)

**இந்தக் கட்டுரையை இளைஞர் அணி இணையதளத்தில் படிக்க அருகில் உள்ள QR Code-ஐ ஸ்கேன் செய்யவும்.**

## :ப்ளாஷ்பேக்




சண்முகசுந்தரம்

### கலைஞரின் பாராட்டு!

**பே**ரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு கல்லூரி மாணவனாக இருந்த காலத்திலேயே கழகப் பணியாற்றத் தொடங்கி விட்டேன். 1984- ஆம் ஆண்டு கோவை வடவள்ளியில் நிதியளிப்பு விழா ஒன்றை முன்னின்று ஏற்பாடு செய்திருந்தேன். அந்நிகழ்வைச் சிறப்புற ஏற்பாடு செய்தமைக்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் என்னைப் பாராட்டி சால்வை அணிவித்தார். அப்போது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. நான் 25 வயதில் பேரூராட்சித் தலைவராகப் போட்டியிட்டு வெற்றிபெற, தலைவருடனான இச்சந்திப்பு வித்தாக அமைந்தது.

**-வ.ம.சண்முகசுந்தரம்,**
**பகுதிக் கழகச் செயலாளர்,**
**வடவள்ளி,**
**கோயம்புத்தூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்பவேண்டிய முகவரி : அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## ஓர் ஆளுமையின் அருங்காட்சியகம்!




**ஏ**.வி.எம். இந்தியத் திரைப்பட வரலாற்றில், தமிழ்நாட்டைச் சார்ந்த இந்தத் திரைப்படத் தயாரிப்பு நிறுவனத்துக்கு முக்கியப் பங்குண்டு.

ஏ.வி.மெய்யப்பன் அவர்களால் காரைக்குடியில் தொடங்கப்பட்ட இந்த நிறுவனம், சென்னையின் மிக முக்கியமான அடையாளமாகி, இன்று தென்னிந்திய சினிமாவின் முகமாகவும், இந்திய சினிமாவில் விரல்விட்டு எண்ணக்கூடிய பாரம்பரியமான தயாரிப்பு நிறுவனங்களில் ஒன்றாகவும் திகழ்கிறது.

தற்போது நான்காவது தலைமுறையைச் சார்ந்தவர்கள் இந்த நிறுவனத்தை நிர்வகித்து வருகிறார்கள்.

அந்த நிறுவனம், தான் கடந்து வந்த பாதையை நினைவுகூரும் விதமாக, சென்னை வடபழனி ஏ.வி.எம்.ஸ்டுடியோ வளாகத்தில், **'ஏ.வி.எம். ஹெரிடேஜ் மியூசியம்'** என்ற அருங்காட்சியகம் ஒன்றைத் திறந்துள்ளது. இதனைக் கடந்த மே- 7 ஆம் தேதி நம் கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த அருங்காட்சியகத்தில் ஏ.வி.எம். நிறுவனம் தனது ஆரம்ப காலங்களில் இருந்து தற்போது வரை பயன்படுத்திய படக் கருவிகள், படங்களில் பயன்படுத்தப்பட்ட கார்கள், பைக்குகள், அரசியல், திரைத்துறை சார்ந்த பிரபலங்கள் பயன்படுத்திய கார்கள் ஆகியவை இடம்பெற்றுள்ளன. தவிர, பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோருடன் ஏ.வி.எம். நிறுவனருக்கு இருந்த நட்பு தொடர்பான புகைப்படத் தொகுப்பும் இடம்பெற்றுள்ளது.


கலைஞரின் திரைக்கதை, வசனத்தில் வெளிவந்து, நடிகர் சிவாஜி கணேசன் 'சக்ஸஸ்' என்று முதல் வசனம் பேசிய 'பராசக்தி' திரைப்படத்தின் 50-வது ஆண்டை நினைவுகூரும் விதமாக 2002-ஆம் ஆண்டு வடிவமைக்கப்பட்ட சிலை இந்த அருங்காட்சியகத்தின் 'ஹைலைட்!'

## கருவூலம்

### சிறைச்சாலைச் சிக்கல்!

**1975 -ஆம் ஆண்டு நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டபோது தடையை மீறி, முன் அனுமதி எதுவும் பெறாமல் 'ஜனநாயகம் காப்போம்', 'சர்வாதிகாரம் ஒழிப்போம்' என சென்னை அண்ணா சிலை முன் பேரணி, பொதுக்கூட்டத்தை நடத்தினார் கலைஞர். எல்லோரும் கைது செய்யப்பட்ட நேரத்தில், கலைஞர் கைது செய்யப்படவில்லை. தலைவர் கைதானால் தொண்டர்களும் போராட்டம் செய்து சிறைக்குவர விரும்புவர். அத்தனை பேரையும் அடைக்கப் போதுமான சிறைச்சாலை வசதி இல்லை என்பதால், கலைஞரைக் கைது செய்வதைத் தவிர்த்தனர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 113




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2021-2023.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2021-2023 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.